

நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள தலைமை அரசு மருத்துவமனையில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் டயாலிசிஸ் மையம் அமைப்பதற்காக ரூ.10.00 இலட்சம் நிதியுதவி வழங்கி, மருத்துவமனையை கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. நேரில் ஆய்வு செய்தார். அதுபோது மாவட்ட கழகச் செயலாளர் கே.எம்.இராஜீ எம்.எல்.ஏ. சட்டமன்ற உறுப்பினர் திராவிடமணி மற்றும் மருத்துவர்கள், கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

## மேற்கு வங்கத்தில் 12 வயது சிறுமிக்கு பாலியல் அத்துமீறல்!

# குடும்பத்தினரை மம்தா பானர்ஜி சந்திப்பதைத் தடுக்க பா.ஜ.க. அரசு முயற்சி!

கொல்கத்தா, ஜூலை. 9-

மேற்கு வங்கத்தில் பலாத்காரம் செய்யப்பட்ட சிறுமியின் குடும்பத்தினரை சந்திக்கச் செல்ல இருந்த திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதாக அவரது கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

மேற்கு வங்க மாநிலம் பாருய்பூரில் 12 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரத்தில் இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலும் பாஜக நிர்வாகி ஒருவரிடம் விசாரணை நடந்து வருகிறது.

திரிணாமுல் காங்கிரஸ் தனது அதிகாரப்பூர்வ ட்விட்டரில், "பாருய்பூருக்கு செல்ல மம்தா பானர்ஜி திட்டமிட்டிருந்ததை அறிந்ததும், அவரது வீட்டின் முன்பு ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டதுடன், தடுப்புகளும் அமைக்கப்பட்டு வெளியே செல்ல முடியாத வகையில் தடுக்கப்பட்டார். #JusticeForBaruipur என்ற கோரிக்கை மாறாது. பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் மம்தா பானர்ஜி உறுதியாக உள்ளார்" என்றும் அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தின் சூர்யாபூர் பகுதியில் வசித்து வந்த 12 வயது சிறுமி, தனது தோழியின் பிறந்தநாளுக்கான பரிசு வாங்குவதற்காகச் சனிக்கிழமை வீட்டை விட்டு வெளியே சென்றதாகக் கூறப்படுகிறது. ஆனால், நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதையடுத்து குடும்பத்தினர் பல இடங்களில் தேடியுள்ளனர். நான்கு பேர் சிறுமியை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றதாகவும், இது குறித்து போலீசாரிடம் புகார் தெரிவித்த போதும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குடும்பத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்தச் சூழலில் தான் ஞாயிற்றுக்கிழமை காலை, உள்ளூர் மக்கள் சந்தேக நபர் ஒருவரைப் பிடித்து விசாரித்தபோது, சிறுமியின் உடல் மறைத்து வைக்கப்பட்ட இடத்தை அவர் தெரிவித்ததாக போலீசார் கூறினர். அதன்படி உள்ளூர் சந்தை அருகே உள்ள குளம் ஒன்றின் அருகில் சாக்குப்பைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சிறுமியின் உடல் மீட்கப்பட்டது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியது.

சிறுமியின் உடல் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆத்திரமடைந்த பொதுமக்கள் பாருய்பூர் ஜெய்நகர் சாலையை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். டயர்களை எரித்து, சில போலீஸ் வாகனங்களையும் சேதப்படுத்தினர். இதையடுத்து அங்கு ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

பின்னர், சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்து விசாரணை நடத்தப்படுவதாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் தொடர்புடையதாகக் கூறப்படும் ஒருவரை, சிறுமியின் உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் தாக்கியதில் அவர் உயிரிழந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும், இந்த வழக்கில் இதுவரை நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், உள்ளூர் பாஜக நிர்வாகி ஒருவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. அபிஷேக் பானர்ஜி பாஜகவை கடுமையாக விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர், "பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாகக் கூறி மேற்கு வங்கத்தில் அரசியல் செய்யும் பாஜக, இதுபோன்ற சம்பவங்களில் ஏன் அமைதியாக இருக்கிறது? குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கும் வேலையையே பாஜக செய்கிறது. இது மிகவும் வெட்கக்கேடானது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி கிடைக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், மம்தா பானர்ஜி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதாக திரிணாமுல் காங்கிரஸ் கூறியுள்ள குற்றச்சாட்டுக்கு, மேற்கு வங்க நிர்வாகம் மற்றும் பாஜக தரப்பில் இதுவரை எந்த அதிகாரப்பூர்வ விளக்கமும் வெளியாகவில்லை.

# தேவகோட்டை நகராட்சி சார்பில் பசுமை விழிப்புணர்வு முகாம்!

தேவகோட்டை, ஜூலை, 8–

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில், நகர்ப்புறங்களில் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் நோக்கில் தேவகோட்டை நகராட்சி சார்பில் மரக்கன்றுகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு தேவகோட்டை நகர்மன்றத் தலைவர் சுந்தரலிங்கம் தலைமை வகித்தார். பள்ளி தலைமையாசிரியர் சொக்கலிங்கம், நகராட்சி ஆணையாளர் ராஜமாணிக்கம், நகர்மன்ற துணைத் தலைவர் ரமேஷ்,சமூக ஆர்வலர் பொன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் நகர்மன்றத் தலைவர் சுந்தரலிங்கம் பேசியதாவது:

"மரங்கள் மனித வாழ்க்கையின் ஆதாரமாக திகழ்கின்றன. நாம் வெளியேற்றும் கார்பன்டை ஆக்சைடை உள்வாங்கி, உயிர்வாழ அத்தியாவசியமான ஆக்சிஜனை வழங்குகின்றன. மரங்கள் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதோடு, தூய்மையான காற்று, உணவு, நிழல், மழை வளம் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையையும் உறுதி செய்கின்றன.

வீடுகள் மற்றும் சாலையோரங்களில் நடப்பட்ட மரக்கன்றுகள் வறண்டு காணப்பட்டால், குடிநீரை பயன்படுத்துவது போலவே சிறிதளவு தண்ணீரையாவது ஊற்றி அவற்றை பாதுகாக்க வேண்டும். ஒவ்வொருவரும் மரங்களை வளர்த்து பராமரித்தால் தேவகோட்டையை பசுமை நிறைந்த நகரமாக மாற்ற முடியும். இப்பள்ளி மாணவர்கள் மரங்களை வளர்ப்பதில் தொடர்ந்து ஆர்வம் காட்டுவது பாராட்டுக்குரியது. இன்று வழங்கப்படும் மரக்கன்றுகளை நன்கு பராமரித்து வளர்த்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முன்னுதாரணமாக திகழ வேண்டும், என்றார்.

இதனைத் தொடர்ந்து, பள்ளி வளாகத்தில் நகர்மன்றத் தலைவர் சுந்தர லிங்கம் மற்றும் துணைத்தலைவர் ரமேஷ் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர்.

பின்னர், சீதாப்பழம், கொய்யா, பலா உள்ளிட்ட பல்வேறு வகைகளைச் சேர்ந்த மொத்தம் 5 மரக்கன்றுகள் அடங்கிய தொகுப்புகள் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டன. மரக்கன்றுகளை உற்சாகத்துடன் பெற்றுக் கொண்ட மாணவர்கள், அவற்றை முறையாக வளர்ப்பதாக உறுதியளித்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை தேவகோட்டை நகராட்சி சுகாதார அலுவலர் பாண்டி செல்வம், சுகாதார ஆய்வாளர் பிருந்தா, உதவியாளர் ஜெகன் மற்றும் நகராட்சி சுகாதாரப் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

ஆசிரியை சிவரஞ்சனி வரவேற்புரையையும், ஆசிரியர் ஸ்ரீதர் நன்றியுரையையும் வழங்கினர்.

இந்நிகழ்வில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், நகராட்சி அலுவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மரங்கள் வளர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# குழந்தை தமிழரசன்

**ஜூலை 9 (2020)**



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கல்லூரி மாணவர் பேரவை தலைவராகவும், தலைமைக் கழகப் பேச்சாளராகவும் விளங்கியதோடு, பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், தணிக்கைக் குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், தீர்மானக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**1996ல் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## இந்தித் திணிப்பு:

# அசாம் மாநிலத்தின் கதியும்! தமிழ்நாட்டின் நிலையும்!

இந்திய ஒன்றியத்தின் வடகிழக்குப் பகுதியின் வாசலாக இருக்கும் அசாம் மாநிலத்தில், அங்கு ஆள்கின்ற பா.ஜ.க. அரசு இந்தி மொழியை அசாம் மாநிலத்தின் ஆட்சிமொழி (அலுவல் மொழி) பட்டியலில் இணைத்துள்ளது. ஏற்கனவே அசாமி, ஆங்கிலம், போடோ ஆகிய 3 மொழிகள் அசாம் மாநிலத்தின் ஆட்சி மொழிகளாக உள்ளன. நான்காவதாக இந்தியை வலுக்கட்டாயமாக ஆட்சி மொழியாக்கியுள்ளது, முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா தலைமையிலான பா.ஜ.க. அரசு.

அசாம் மாநிலம் மொழி உரிமையில் தனி அடையாளம் கொண்ட மாநிலமாகும். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலேயே வங்காள மாகாணத்துடன் இணைந்திருந்த அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களைத் தனியாகப் பிரித்து அசாம் மாகாணமாக ஆக்கியதுடன், அசாமிபோடோ ஆகிய மொழிகளைப் பேசுகிறவர்களுக்குரிய உரிமைகள் நிலைநாட்டப்பட்டன. **பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெற்ற பிறகு, இந்தியா குடியரசு நாடான அதே 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் அசாம் தனி மாநிலமானது. மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்படுவதற்கு முன்பே, அசாம் மொழி பேசும் மக்களுக்கான மாநிலம் உருவானதிலிருந்தே அதன் முக்கியத்துவத்தை உணரலாம்.**

தன் மாநிலத்தில் உள்ள அசாமி, போடோ ஆகிய இரு மொழிகளும் இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையின் 22 மொழிகளில் இடம்பிடித்திருக்கும் நிலையில், தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருப்பதால் இந்த மூன்று மொழிகளையும் அசாம் மாநிலத்தின் ஆட்சி மொழிகளாக்கினர். போடோ மொழி பேசுபவர்கள் அசாம் மாநிலத்தின் பூடான் மற்றும் அருணாசலப்பிரதேசத்தின் எல்லையோரப் பகுதிகளில் வசிக்கும் சமவெளிப் பழங்குடியினர். அவர்கள் தங்களுக்கெனத் தனித்துவமானப் பண்பாட்டைக் கொண்டவர்கள். இந்த நிலையில் எதற்காக இந்தியை நான்காவது ஆட்சிமொழியாக அந்த மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசு அறிவித்தி ருக்கிறது?



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்.

**இந்தி, 'தேசிய மொழி' (ராஷ்ட்ர பாஷா) என்பதால் அதனை மாநிலத்தின் ஆட்சி மொழியாக்குகிறோம் என்று அசாம் மாநில சட்டமன்றக் கூட்டத்தின் முதல் நாளான ஜூலை 6ந் தேதி, அதன் பேரவைத் தலைவர் ரஞ்சித்குமார் தாஸ் அறிவித்தார். இந்தி என்பது இந்தியாவின் தேசிய மொழி அல்ல. ஆனால், அசாம் முதல் தமிழ்நாடு வரை இந்திதான் இந்தியாவின் தேசிய மொழி என்கிற மோசடிப் பிரச்சாரம் தொடர்ந்து செய்யப்படுகிறது.** இந்தி என்பது இந்திய ஒன்றிய அரசின் அலுவல் மொழி. ஆங்கிலம் இணை அலுவல் மொழியாக உள்ளது. உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான், பீகார் உள்ளிட்ட வடமாநிலங்களில் இந்தி பேசும் மக்கள் அதிகளவில் உள்ளதால் அந்த மாநிலங்களில் அது அலுவல் மொழியாக உள்ளது.

**இந்தியாவுக்கெனத் தனியாக ஒரு தேசிய மொழி கிடையாது. எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றிருக்கும் 22 மொழிகளும், அதில் இடம்பெறக் காத்திருக்கும் மொழிகளும் இந்தியாவின் மொழிகள்தான். ஆனால், இந்தியைத் திணிப்பதற்கு, 75 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் முயற்சிக்காக, அதனை தேசிய மொழி என்று சொல்லி, பொய்யானக் கருத்தைப் பரப்பி வருகிறார்கள். அசாம் மாநிலத்தில் அந்தப் பொய்யை அதிகாரப்பூர்வமானதாக மாற்றி, இந்தி மொழியை நான்காவது ஆட்சி மொழியாக்கியுள்ளனர்.**

அசாம் மாநில சட்டமன்ற நிகழ்வுகளை ஒளிபரப்புவதற்காக 'அசாம் லெஜிஸ்லேடிவ் அசெம்ப்ளி' என்ற தொலைக்காட்சி சேனலும் இயங்கி வருகிறது. அதனை 'அசாம் விதான் சபா டி.வி.' எனப் பெயர் மாற்றம் செய்துள்ள அசாம் பா.ஜ.க. அரசு, அந்த டி.வி. சேனலின் இலச்சினையில் இடம்பெற்றிருந்த போடோ எழுத்துகளையும் நீக்கிவிட்டது. இதனை எதிர்த்து அனைத்து போடோ மாணவர்கள் சங்கம் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது. போடோ மக்களின் உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுவதை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அசாம் முதல்வர் பிஸ்வா சர்மா இதற்கு சப்பைக்கட்டான காரணம் சொல்லி, சமூக வலைத்தளத்தில் சால்ஜாப்பு செய்திருக்கிறார். அசாம் மாநிலத்தின் கதியை நினைத்து அசாமி, போடோ மொழி பேசும் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

**சொந்த மாநில மக்கள் பேசும் மொழிகளைப் பின்னுக்குத் தள்ளி, இந்தியைத் திணித்து, மெல்ல மெல்ல மாநில மொழிகளை அழிக்கும் மோசமான செயல்பாடு, இந்தியாவின் வட மாநிலங்களில் நிறைவேற்றப்பட்டு, இப்போது அது வடகிழக்கு மாகாண நுழைவாயிலுக்குள் தன் வேலையைக் காட்டத் தொடங்கியுள்ளது.** தேசியக் கல்விக் கொள்கை 2020 மூலமாக மும்மொழிக் கொள்கையைக் கட்டாயமாக்கியுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசு, தனது பாடத்திட்டத்தின் கீழ் வரும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் இந்திசமஸ்கிருதம் கட்டாயம் என்பதை உறுதி செய்துவிட்டது.

ஒன்றிய பா.ஜ.க. அரசும், பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களும் இந்தித் திணிப்பைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன. இவற்றையெல்லாம் 60 ஆண்டுகளுக்கு முன்பே தொலைநோக்குப் பார்வையுடன் உணர்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாளன்று, தி.மு.கழக ஆட்சியின் முதல்வராக இருமொழிக் கொள்கையை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றினார். இன்று வரை அது நிலைப்பெற்றிருக்கிறது. தற்போது தமிழ்நாட்டை ஆளும் த.வெ.க. அரசின் ஆளுநர் உரையில்கூட, அண்ணாவின் இருமொழிக்கொள்கைக் கடைப்பிடிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

**த.வெ.க. அரசின் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். இருமொழிக் கொள்கையைக் கடைப்பிடிப்போம் என்று அறிவித்துவிட்டு, 1000 சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்குத் தடையின்மைச் சான்று வழங்கிவிட்டோம் என்று தம்பட்டம் அடிக்கிறது த.வெ.க. அரசு. இந்தப் பள்ளிகள் வாயிலாக இந்தித் திணிப்புக்கு கொல்லைப்புற வாசல் திறக்கப்பட்டுள்ளது.** அரசுப் பள்ளியில் ஆய்வு என்ற பெயரில் நுழைந்து, அங்கு படிக்கும் மாணவியிடம் தனது இங்கிலீஷ் திமிரைக் காட்டிய தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா இதற்கு முன், தன்னிடம் பேட்டி கேட்ட ஆங்கிலத் தொலைக்காட்சி சேனலுக்கு இந்தியில் பேட்டி கொடுத்தார். இந்தியில் பேசினால்தான் இந்தியாவின் பிற மாநிலங்களில் உள்ளவர்களுக்குப் புரியும் என்று அதற்கு வியாக்கியானம் செய்தார். இந்திதான் இந்த நாட்டின் தேசிய மொழி என்ற மோசடியான கருத்தை நம்புகிறவராகவும், அதனைப் பரப்புகிறவராகும் தமிழ்நாட்டின் அமைச்சர் இருப்பது ஆழ்ந்த கவலைக்குரியது.

அசாம் மாநிலத்தில் நான்காவது ஆட்சி மொழியாக இந்தியை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அந்த மாநிலத்தின் அமைச்சர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடங்கிய அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட எதிர்க்கட்சியான காங்கிரஸின் சட்டமன்ற உறுப்பினர் வாசித் அலி சவுத்ரியும், இந்திக்குப் பச்சைக் கொடிக் காட்டியிருக்கிறார். தமிழ்நாட்டில் த.வெ.க. கூட்டணி அரசில் காங்கிரஸ் பங்கெடுத்துள்ளது.

**திராவிட இயக்கங்கள், "வாழ்க" என்று முழங்கியபோது, அதற்குப் பதிலாக, 'ஜே' போட்டதும், பெயருக்கு முன் 'திரு' என்கிற தமிழ்ச் சொல்லுக்குப் பதில், பெயருக்குப் பின்னால் 'ஜி' போட்டு அழைத்ததும் தமிழ்நாட்டில் காங்கிரஸ் உருவாக்கிய கலாச்சாரமாகும். அதன் நீட்சியாக பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். கூட்டம் செயல்பட்டு வருகிறது. த.வெ.க. அமைச்சரவையில் காங்கிரஸ் நேரடியாகப் பங்கேற்றுள்ளது. ஆர்.எஸ்.எஸ். தன் வளர்ப்புகளை ஊடுருவச் செய்திருக்கிறது. அசாமின் கதியைப் பார்க்கும்போது, தமிழ்நாட்டின் நிலை என்னாகுமோ?**

# கல்விக் கட்டணங்களை அறிவிப்புப் பலகைகளில் வெளியிடுக!

## தனியார் பள்ளிகளுக்கு சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு!

சென்னை,ஜூலை.9–

தனியார் பள்ளிகள் தகவல் உரிமை சட்டத்தின் வரம்புக்குள் வராது எனக் கூறியுள்ள சென்னை உயர் நீதிமன்றம், தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைச் சட்டப்படி, கல்விக் கட்டணங்களை பள்ளிகளின் அறிவிப்பு பலகைகளில் வெளியிட உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளுக்கும் அரசு நிர்ணயித்துள்ள கல்விக் கட்டண விவரங்களை, பள்ளிகளின் விளம்பரப் பலகைகளில் வெளியிடுவதை கட்டாயமாக்கும்படி, தனியார் பள்ளிகள் இயக்குநருக்கு தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் மே 25ம் தேதி உத்தரவிட்டது.

அதன்படி, கட்டண விவரங்களை விளம்பரப் பலகையில் வெளியிடும்படி, அனைத்து தனியார் நர்சரி, பிரைமரி, மெட்ரிக், சிபிஎஸ்இ, பிற வாரிய பள்ளிகளுக்கு தனியார் பள்ளிகள் இயக்குநர் ஜூன் 1ம் தேதி சுற்றறிக்கை பிறப்பித்தார்.

இந்நிலையில் மாநில தகவல் ஆணைய உத்தரவையும், தனியார் பள்ளிகள் இயக்குநர் பிறப்பித்த அறிவிப்பையும் ரத்து செய்யக் கோரி அகில இந்திய தனியார் கல்வி நிறுவனங்களின் சங்கத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கே.பழனியப்பன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எம்.தண்டபாணி, தனியார் பள்ளிகள் தகவல் உரிமை சட்டத்தின் வரம்புக்குள் வராது என்ற போதும், தனியார் பள்ளிகள் ஒழுங்கு முறை சட்டப்படி நியாயத் தன்மையை வெளிப்படுத்த மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளும், கல்விக் கட்டண விவரங்களை அறிவிப்புப் பலகைகளில் வெளியிட வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில், நகர்ப்புறங்களில் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் நோக்கில் தேவகோட்டை நகராட்சி சார்பில் மரக்கன்றுகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு தேவகோட்டை நகர்மன்றத் தலைவர் சுந்தரலிங்கம் தலைமை வகித்தார். பள்ளி தலைமையாசிரியர் சொக்கலிங்கம் , நகராட்சி ஆணையாளர் ராஜமாணிக்கம், நகர்மன்ற துணைத்தலைவர் ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.